**செய்தி வெளியீடு எண்:145** **நாள் : 08.04.2015**

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் **ஏப்ரல் 2015** மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் **11 .04.2015** அன்று காலை **10.00** மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள **16** மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | தூய மாற்கு நடுநிலைப்பள்ளி ,123/62. வேப்பேரி நெடுஞ்சாலை.,பெரியமேடு. சென்னை 600003 (கால்நடை மருத்துவ கல்லூரி அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி , எண் 731. டி.எச் ரோடு.,புது வண்ணாரப்பேட்டை. சென்னை 600081 (தமிழ்நாடு தியேட்டர் அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை தொடக்கப் பள்ளி , 14வது கிழக்கு குறுக்கு தெரு, எம்,கே.பி நகர், சென்னை 600039 (எம்,கே.பி நகர் காவல் நிலையம் பின்புறம்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி 1, பாலவாயல் ரோடு, அயனாவரம் , சென்னை 600 023 (ஜாயிண்ட் ஆபீஸ் மற்றும் அயனாவரம் மார்க்கெட் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | ஸ்ரீ ஆதித்யா மெட்ரிகுலே [2] ன் பள்ளி, எண் 1/243 ஆண்டாள் நகர் விரிவாக்கம், வானகரம், சென்னை 600 116 (புற்றுகோயில் எதிரில்) |
| 6 | வில்லிவாக்கம் | ஐ.சி.எப் கிழக்கு காலனி , நன்னல மன்றம் (விரிவாக்கம்), சென்னை 600038 (கம்பர் அரங்கம் எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, மாதவரம் பால்பண்ணை, சென்னை 600 051 |
| 8 | ஆவடி | ஆவடி பெருநகராட்சி தொடக்க பள்ளி , பருத்திப்பட்டு, சென்னை 600071 (அய்யங்குளம் பஸ்நிலையம் அருகில்) |
| 9 | தி.நகர் | மாநகராட்சி பகுதி அலுவலக வளாகம்,12, மாசிலாமணி தெரு, தி.நகர், சென்னை–17 (பாண்டிபஜார் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | புனித லாசரஸ் நடுநிலைப்பள்ளி, எண் 28/32, மாதா சர்ச் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை–600 028. (சார்பதிவாளர் அலுவலகம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | இந்துமத நடுநிலைப்பள்ளி, எண் 596, எம்.கே.என் ரோடு, ஆலந்தூர், சென்னை –16 (சி.எஸ்.ஐ சர்ச் எதிரில்) |
| 12 | தாம்பரம் | திருவஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலகம், திருவஞ்சேரி, சென்னை–126 (திருவஞ்சேரி நியாயவிலைக் கடை அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி, 21, பெருமாள் கோயில் தெரு, மேட்டுப்பாளையம், மேற்கு மாம்பலம்,சென்னை–33 (பெருமாள் கோயில் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைப்பள்ளி, 64, ராமா தெரு, நுங்கம்பாக்கம், (நுங்கம்பாக்கம் காவல்நிலையம் அருகில்) சென்னை–34 |
| 15 | சேப்பாக்கம் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, 7, இருசப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5 (முருகன் கோயில் அருகில்) |
| 16 | சோழங்கநல்லூர் | கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்க கட்டிடம் (சமுதாயக்கூடம்), 2வது குறுக்கு தெரு, கார்த்திகேயபுரம், மடிப்பாக்கம், சென்னை–91 (மடிப்பாக்கம் பஸ் நிலையம் அருகில்) |

**முதன்மை செயலாளர்/**
**ஆணையாளருக்காக**

## வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**